# தம்பாக் மாலை

காயல்பட்டணம்
அல்வலிய்யுல்காமில் அல்ஆரிபுபில்லாஹ்
**ஸாம் ஷிஹாபுத்தீன் வலீ நாயகம்**
அவர்களால் இயற்றப்பட்டது.

★

வெளியிடுவோர்:
பி. இ. மு. க. சாகுல்ஹமீது ஹாஜியார்,
காயல்பட்டணம்.

1384] விலை 38 பைசா [1964

# தம்பாக் மாலை

காயல்பட்டணம்

அல்வலிய்யுல்காமில் அல்ஆரிபுபில்லாஹ்

**ஸாம் ஷிஹாபுத்தீன் வலீ நாயகம்**

அவர்களால் இயற்றப்பட்டது.

★

வெளியிடுவோர்:

பி. இ. மு. க. சாகுல்ஹமீது ஹாஜியார்,

காயல்பட்டணம்.

1384] விலை 38 பைசா [1964

# பதிப்புரை

அல்லாஹ் நல்லருள்பாலிப்பானக.

எனதன்புள்ள முஸ்லிம் சகோதர சகோதரிகளே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு.

காயல்பட்டணம் அல்வலியுல்காமில் ஷைகு சுலைமான்வலிநாயகம் அவர்களின் ஐந்து இரத்தின புத்திரர்களில் ஒருவராகிய அல்வலியுல்காமில் அல் ஆரிபுபில்லாஹ் ஸாம் ஷிஹாபுத்தீன் வலீ நாயகம் அவர்கள் இயற்றிய "தம்பாக் மாலை" எனும் இப் பாமாலையில் புகையிலை உபயோகிப்பது பற்றிய தீங்குகள் விளக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் சகோதர சகோதரிகள் இவ்வரிய பாமாலை நூலை வாங்கி படித்துப் பலன் பெறுவார்களென எதிர் பார்க்கிறேன்.

இதனை சிறந்த முறையில் வெளியிட ஊக்கமளித்து, சரிபார்த்து, அரபி வார்த்தைகளுக்கு தகுந்த குறிப்புகளும் தந்துதவிய அல்ஹாபிள் மௌலவி சா. சாகுல் ஹமீது ஆலிம் புப்தீ அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்
பி. இ. மு. க சாகுல்ஹமீது ஹாஜியார்
காயல்பட்டணம்.

28 — 3 — 1384 7 — 8 — 64

## ஞான விருத்தம்

கற்றுலென்னபலன் பலன்
கசடற கற்றுலோகற்றபலன்
உற்றுலென்னபலன் பலன்
உள்ளுணர்ந்துஉற்றுலே உற்றபலன்
பெற்றுலென்னபலன் பலன்
பேர்பெறப்பெற்றுலோ பெற்றபலன்
இறந்தாலென்னபலன் பலன்
இறையறிந்துஇறந்தாலோ இறந்தபலன்.

### "தொங்கல்"

(1) மக்காதனில் எங்கள்நபி பிறந்து
மதீனு நகருக்கு ஹிஜ்ரத் போய்
ஹக்கனருள்படி வபாத்துமாகி
ஹைறூக அங்கு அடங்கினுர்கள்

(2) தக்க தாயார்பேர் ஆமீனுவா
தகப்பர் அப்துல்லா பாட்டனுர்பேர்
சக்கன்றி அப்துல் முத்தலிபாம்
சங்கையுள ஹாஷிம் பூட்டனுராம்

(3) மிக்க மூப்பாட்டர் அப்துமனுபு
மேலாம் தலைமுறை இதுவாகுமே
நல்ல குறைஷியர் குலத்துதித்தோர்
எங்கள் முஹம்மது நபியுல்லாதாம்

(4) வல்லோன் நபிமாரில் கடைசியானுேர்
வருசை மும்மறை மாற்றியவர்
சொல்லும் ஹுகுமு அடங்கலையும்
சொந்தமாய் கபூல் செய்கிறதும்

(5) அவர்கள்மேல் நேசம் வைப்பதுவும்
அவர்கள் குணம் நடையெடுப்பதுவும்
அவர்கள் ஏவல் தனைஉகந்து
எடுத்து நடப்பது பறுலாகுமே.

(6) ஈமான் தனைக்கொண்டு இஸ்லாம்கொண்டும்
இறுக்கும் பறுலுகள் இறுக்காமலே
சீமான் விலக்கிய பாவங்களை
தெரிந்துவிலகாமல் உலகத்திலே

(7) நாமாம் இஸ்லாமென்டிருப்போர்கள் தாம்
நாளைகியாமத்து நாள்தனிலே
கோமான் லஃனத்தால் நபிமுனிவால்
கொடிய நரகத்தில் மடிவார்களே

(8) தொழுகை தனைவிட்டும் முழுக்கைவிட்டும்
துன்பமிக உள்ள இன்பம் கொண்டு
கழுதை இனம்போலே ஆணும்பெண்ணும்
ஹயாக் கேடாக வாழ்ந்தவர்கள்

(9) முழுதும் உயிர்போயி மவுத்தானபின்
மோசமுளபிணப் நாறியபின்
அழுதுகுரல்கேள்க்க கபுறுதனில்
அதாபுபடும் தன்மை அறிந்திலையோ

(10) ஆலிமிடம் சென்று படித்தறிந்து
அழுக்காம் பாவங்கள் இன்னதென்று
ஸாலிஹாம் அமல் இன்னதென்று
ஷறஹின்படி அமல்செய்யாமலே

(11) ஹாலிக்காகிய கெட்டோர்களை
கலந்து இச்சைபோல் நடப்போர்கள்தாம்
மாலிம்தனைவிட்டு கப்பலேறும்
மனிதர்படும்பாடு படுவார்களே

(12) ஷரீஅத்தானது கப்பல்போலாம்
தானும்துடர்ந்தோர்கள் சரக்குபோலாம்
அறிவும் அமல்களும் பாய்மரமாம்
அறிந்தஉலமாக்கள் மாலிம்போலாம்

(13) மருட்டும் துன்யாதான் கடலும்காற்றும்
மறவும் ஈமான்தான் ஸுக்கானுகும்
அரிதாம் கப்பல்தான புரளுமாகில்
அதிலுள்ளோரெல்லாம் மாண்டுபோவார்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

இது

காயல்பட்டணம், குதுபுஸ்ஸமான், அஷ்ஷெய்கு
சுலைமான் ஒலியுல்லாஹ் அவர்களின் புதல்வர்கள்
ஐந்து மாணிக்கங்களில் ஒருவரான
அல்லாமத்துஸ்ஸமான்

## ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலியுல்லாஹ் அவர்கள்

புகையிலை சம்பந்தமான விலக்கல்களையும்
அதன் தீங்குகளையும் குறித்துப் பாடிய

# தம்பாக் மாலை

என்று நாமம் சூட்டப்பட்ட
உன்னத மாலை.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

## வெண்பா

ஆகாத பே இலையின் பொல்லாக் கருமம் புகலுகிறேன்
நல்லோர்கள் செவிகொண்டுறுதியாய் செப்பமாய்
கேள்ப்பதற்கு. [1]கவியான நாயகனே காப்பு.

(1) சக்தியுடையவனை

## தொங்கல்

(1) இங்கொண்டனுகா தான் நாமம் கொண்டும்
செம்மல் நபி ஸலவாத்து கொண்டும்
பாங்கர் அஸ்ஹாபி மாருடைய
பஹ்று[1] தனைக் கொண்டும் நாவிமாம்கள்

(2) ஆங்காரங்கொண்டும் அவ்லியாக்கள்
ஆசாரங்கொண்டும் அதபுடையோர்
நீங்காய் வருசைகொண்டும் ஸாமென்போன்
நெறிகேடன் இபுலீஸுடைய

(3) ஊங்கும் சிறுநீரால் எழுந்த இலை
ஊனக்கருமத்தை செப்பகேள்மோ
ஆதிகுறுஆனில் நபி ஹதீதில்
அஸ்ஹாபிமார்கள் சொல்லுரையில்

(4) நீதி அவ்லியாமாருடைய
நிலத்திலுள ஸாலிஹான பேர்கள்
ஓதியுரைத்திட்ட விசழமதில்
ஊத்த புகையிலை காரியம்கள்

(5) வீதியாய் [2]கிஞயத்தாகவே
வெளியாய் வருகுதென்றார் நல்லோர்கள்
ஈனன் இபுலீஸு மூத்திரத்தால்
எழுந்த புகையிலை குடிப்பவர்கள்

(6) தானமாய் தவ்பா செய்யாமலே
தரையுள்ளடங்கினல் மரித்த பின்பு
வானமமைத்தாதி றஹ்மத்தெற்றார்
மன்னர் நபி ஷபாஅத்தும் பெறார்

(1) கீர்த்தி (2) சைக்கினை



(7) வானகப்பதி புகுதமாட்டார்
வன்னி நரகத்தில் புகுதுவாரே
ஊராலொரு ஊரில் ஒரு மனிதன்
உடையோனருள்படி மரித்தளவில்

(8) சீராய் அவன் தன்னை அடக்கும்போது
தேசகம் மூடிச்சிலையதில்
பாருங்குழிதனில் விழுந்ததென்று
பார்க்கவென வந்து தோண்டும்போது

(9) நேராக கண்டார் அவன் கப்று
நெருப்பாய் எரிந்திடப் பயந்தார்களே!
பயந்து கபுற்றனை மூடி அவன்
[1] பாங்கிபால் வந்து அறிவித்தார்கள்.

(10) பயந்து அவள் சொன்னாள் தொழுதுகொள்வார்
படைத்தோன் தனக்காக ஸக்காத்தளிப்பார்
பயந்து இரவையில் தொழுதிருப்பார்
பணிவிடை விடார் பாவம் செய்யார்

(11) பயந்து தவிழ்ந்தாரில்லை புகையை
படும்பாடடங்கலும் அதினால் என்றாள்
இந்த வேதனை இதுநாலென்று
ஏங்கி தவிர்ந்தார்கள் அவ்வூர்தனில்.

(12) அந்தந்த ஊருக்கெல்லாம் [2]கத்துகள்
அனுப்பினாரந்த ஊரில் [3]காளி
காளியுட கத்துக் கொண்டொருதன்
கடுக நடந்தொரு தோப்பில் சென்று

(1) மனைவி (2) கடிதம் (3) ஊர் அதிகாரி

(13) மோக இதை எடுத்துருஞ்சையிலே
முதலோன் ஒரு மலக்கை விடுத்து
தீங்கன் இவன் கழுத்தை முறித்து
தூங்கும் உடம்புவை உருஞ்சிடவே

(14) மேலவனருளால் கற்பித்தான்
வெளியில் [1]பளீஹத்தாய் மரித்தனனே
இந்த பளீஹத்து இவன் தனக்கு
ஏறின செய்தி ஏதாலென்று

(15) வந்த மனிதர்கள் பார்க்கும்போது
மடித்த ஒரு ஹத்து கண்டார்களே
கண்டு அது வாசகமறிந்து
கலங்கி பயந்து கொண்டோர்கள் கேட்டார்.

(16) அந்தமாய் [2]தவ்பா இறைபால்
அன்பாகச் செய்து தவிர்ந்தார்களே
நாட்டிலுள்ள நல்ல முஸ்லிம்களே
நாட்டமுடன் கேட்டு இதை விடுங்கோ.

(17) வீட்டில் மடந்தயர் தங்களையும்
விலகி தவிருங்கோ றஹ்மத்துண்டாம்
துன்யா தனிலும் ஆகிறம் தனிலும்
தொல்லை கபுறிலும் துக்கமுண்டாம்

(18) பனீஆதம் மக்கள் ஆண் பெண்ணெல்லாம்
வடுவாம் புகையிலை விடுவீர்களே
முஸ்லிம் ஸுல்தான்கள் காபிரான
மோச ஸுல்தான்கள் இதை விலகி

(1) மானக்கேடு (2) பாவமன்னிப்பு



(19) [1]நஜீஸு குடித்தோனை தின்டவனை
நட்டம் வருத்திரூர் அடிக்கிறூர்கள்
இலங்கை அரசன்பால் ஒரு மனிதன்
இந்த இலைதன்னை திண்டு அப்ப

(20) கலங்கி மரித்ததை கண்டு மன்னன்
கரை துறை எல்லாம் விலகினனே

(21) தேசமடங்கலுக்கும் இலங்கை மன்னன்
தீபரமாக ஆள் விடுத்து
வீசும் பெரும் நாற்ற புகை இலையை
வேருடன் வாங்கி சுட்டார்களே.

(22) குலசேகரம்பட்டணம் தனிலே
கோதை இதை குடித்ததின்பின் தட்டு
குலையாகபட்டாள் விட்டை தள்ளி
குறியாய் மனிதர்கள் கூறினரே.

(23) கடலில் குளியோடி யொருமனிதன்
கரையில் கடுக வந்திதை குடித்து
உடனே மரித்துப்போனுனெனவே
உரைத்தார் சிலபேர்கள் என்னுடனே.

(24) கஞ்சா அப்யுனில் [2]மஃஜூன்களில்
கடிந்த வலகான பெரும் நஞ்சதால்
துஞ்சி மரித்தோர்கள் மிகுதியுண்டும்
சொல்ல தொலையாது பனையோலையை.

(25) ஆடு மாடு அருந்தா இலையை
அன்பாய் குடிக்கிறுய் தின்னுகிறுய்
மோடுமிகுந்த பேயா இதனை
மொழிந்த [3]நஸீஹத்து கேட்டறிவாய்.

1) அசூஸி 2) போதை வருத்துகிற 3) நல்லுபதேசம்

(26) கள்ளி எரிக்குவை ஊமத்துவை
கஞ்சாவை சிலக்காலி தின்னும்
கொள்ளிதனில் வைக்கும் புகையிலையை
கொள்ளாதொரு வலங்க மறப்பாய்.

(27) ஈன புகை கசாளம் எடுத்து
ஈந்தாலே துக்கும் உடனே படும்
வான மமைத்தாதி தன்னை அஞ்சி
வன்மை முஸ்லிம்கள் விடுவீர்களே.

(28) [1] கபாயிதடங்கலும் ஹறுமெனவே
ககனேழ மைத்தாதி மறையில் சொன்னான்
கபபயிதடங்கலில் [2] அஹ்பதான
கடிந்த புகையிலை விடுவீர்களே.

(29) பெண்ணாய் பிறந்தவள் அக்காள் தங்கை
பெஞ்சாதி பேத்தி தாய் அதனை
மண்ணும் பதிதனில் இது புசித்தால்
மனது வெறுப்பாக விலகுவீரே.

(30) மூக்கிலிட ஹறும் தின்ன ஹறும்
மோச புகைதன்னை குடிக்க ஹறும்
நோய்க்கு உருஞ்சவும் பெருத்த ஹறும்
நோயங்கமிட்டுப் போகிலுமாம்.

(31) வெள்ளாமை செய்ய ஹறுமிலையை
விலக்காகும் விற்க கொள்ள ஹறும்
தள்ளாமல் கேள்க்கும் நஸீஹத்திதை
தக்கோன் றஹ்மத்து உனக்குண்டாமே.

(1) கெட்ட வஸ்துக்கள் (2) ரொம்பக் கெட்டவை



(32) மடியில் இதை வைத்து தொழுதுகொண்டால்
வணக்கம் [1] பாதிலென்றார் நல்லோர்கள்
கொடிய பெரும் நாற்றமாக நாறும்
குடுகுடா தண்ணீர் நஜீஸாகுமே.

(33) கஞ்சா புகைகளை அருந்துகின்ற
காசன் தனக்கு காசளிப்பதுதான்
பொஞ்சா ஹறுமாகும் அறிந்தாலில்
பொல்லா தீன் குடி புகல்வீர்களே.

(34) எளியேன் உரை கேட்டு தவிழ்ந்தோர்கள்தான்
ஏறமிக உண்டு மாதம் ஒன்றில்
பழிசேர் இலைக்கிரு மூன்று நாலு
பணத்தை அழிப்போனும் தவிழ்ந்துகொண்டான்.

(35) கிழக்கரைதனில் என் சொல் கேட்டு
[2] ஹிம்மத்தாய் விட்டார் இச்செயலை
வாழும் கடை தனில் வைத்து விற்க
மறுத்தார்கள் சிலர் ரஹ்மத்தாமீன்.

(36) கெட்டோம் ஒழிந்தோமே என்று பொல்லா
கிழான் ஷயாத்தீன்கள் கூடிக் கூடி
நஷ்டமானோமேவென அழுது
நகன்றார்கள் நல்லோர் கண்டதுவே.

(37) இந்த களரியில் இருந்து இதை
இனிதாக கேள்க்கும் முஃமினானோர்
வந்து எனக்கு கை தந்து ஸலாம்
வன்மையுடன் செப்ப இதை விடுங்கோ.

(1) அழிந்துபோகும் (2) துணிச்சல்

(38) கேட்டும் கேளாத பேர்கள் போலாய்
[1] கிபுறாய் உதாஸனித்தோர்களுட
நாட்டம் பளுதாக வேணாமவன்
நலமாம் வகை எல்லாம் ஆழ ஆமீன்.

(39) நல்ல [2] அஸல் தனில் பிறந்தெழுந்தோன்
நஸீஹத்துக் கேட்டு நடந்துகொள்வான்
பொல்லா அஸலான [3] பாஸிகுதான்
புத்திதனை கேளான் பங்கமாவான்.

(40) நெருப்பு கொடுக்கவும் ஹறாமிதுக்கு
நெறிகேடன்றுடன் இருக்க ஹறாம்
கருப்பு கட்டி போட்டுறுஞ்சிடுமாம்
கடிந்த ஹறாமென்று கண்டகல்வாய்.

(41) இந்த நசலுக்கு பால் பெஞ்சாதி
ஈனமெனச் சொன்னார் வைத்தியர்கள்
அந்தமாய் கேட்டு அகலுகிறாய்
ஆலிமானோர் சொல் கேட்டகல்வாய்.

(42) ஆலிமானோர் சொல் தட்டுகின்றோன்
ஆதி குறுஆனை நபி ஹதீதை
ஆலம்தனில் தட்டிப் பிறந்தவனும்
ஆனாவிதை விட்டு நல் இலாஹீ.

(43) மக்கம்தனில் மதீனம் தனிலும்
மலைபார்தனிலும் இச்செயல் சிலர்கள்
சிக்காமல் செய்குறானெனவே
செய்யால் அபூஜஹில் எங்கிருந்தான்.

1) பெறுமைத்தனம் 2) அடிமூடு, உற்பத்தி
3) கெட்டவன்



(44) ஷெய்த்தான் மனிதன் அங்கம் அணைந்து
தீங்காய் வருத்தங்கள் உண்டாக்குவான்
ஷெய்த்தான் சிறுநீரில் முளைத்த பூட்டை
சவைத்தால் உருஞ்சினால் விட்டகல்வாய்.

(45) வீணில் உடமையை பளுதாக்கினோன்
வீணன் இபுலீஸ் உடப்பிறப்பென்
ஊண் துயில் இல்லான் மறையில் சொன்னான்
உமை அளிப்பது திடனாய் ஹறாம்.

(46) நஞ்சாய் இருப்பதுக்காய் புத்தியை
நட்டாய் மறைப்பதுக்காய் உடலில்
பொஞ்சாய் நசல்தனை வளைப்பதுக்காய்
பொருந்தா ஹறாமென்றார் உலமாக்கள்தான்.

(47) உலமாக்கள் கூடி ஹறாமென்றதை
உரைப்போர் ஹலாலென்று காபிராவார்
நலமாய் உலமாக்கள் புத்தி கேட்டு
நடப்போர்க்கு நபி மண்டாட்டுண்டாம்.

(48) இக்காலம் தனில் ஒரு நன்மையை
இசைத்தால் உலமாக்கள் சொல்கிறீர்கள்
முக்காலம்தனில் இல்லை என்று
முனிவாம் இலை முன்னாள் உண்டோ சொல்லாய்.

(49) நன்மைதனக்கிந்தபடி சொல்கிறாய்
நாற்றமிக உள்ள பாவமான
தின்மைக்கு செப்பவில்லை நீதம்
செய்குறாய் இது மதியோ செப்பாய்.

(50) ஆகா இங்கிலீஷ் எனும் பறையன்
ஜபான இந்த இலைதனை தான்
வாகாய் கொடுவந்து பரத்திவிற்றான்
வண்டன் கருபாக ஆமீன் ஆமீன்.

(51) சீவின பாக்கில் எறும்புக்கண்போல்
ஷெய்த்தான் இலை பொடி கிடந்த போது
நாவுதனில் வைத்து மென்றபோது
நான் பட்டபாடு இறை அறிவான்.

(52) உடனே உமிழ்ந்து நல்லறள் குடித்து
உருசியுள்ள தேங்காய் தனையும் தின்று
திடணாய் மறுநாள் மட்டும் மயக்கம்
செப்ப அரிதாகும் விடுவீர்களே.

(53) கண்டான் காபிராலொரு காபிரு
கருதும் புதல்வனை அடிக்கிறான்
வண்ட புகையருந்தா எனவே
மக்கள்தனை நீங்கள் விலக்குவீரே.

(54) ஈன இலை தின்போர் குடிப்போருடன்
இயல்பாய் சோறு நீர் அருந்தார் நல்லோர்
வானமமைத்தாதி தன்னை அஞ்சி
வடுவாம் இலைதன்னை விடுவீர்களே.

(55) தீங்குதனைச் செய்ய கண்டோர்கள் மேல்
தீங்குதனை நீக்க வாஜிபாமென்ற்
றோங்கும் மனம் கொண்டு தீங்கு நீங்கும்
உண்மை நபி சொன்னார் இதை நீக்குவாய்.



(56) கக்கல் மிக உண்டாம் கண்கெட்டுப்போம்
காலோயும் நடைசெய்வதற்கு
துக்கமிகவுண்டாம் சரீரம் கெடும்
தய்யல் சலித்திடுவாள் திட்டுவாள்.

(57) அடுப்பங்கரைக்கு நேரிட்டிறப்பு
அவிடம் கருத்து போகும் போலவே
உடப்பாய் முஸ்லிம்கள் புகை குடித்தால்
உங்கள் முகமெல்லாம் கருத்திடுமே.

(58) நாற்றமுள்ள காட்டுப்புகை குடித்தால்
நலமான பல்லு கெட்டு போகும்
ஊத்தப்புகை கொண்டு உடலளறும்
உந்தன் நசல்மிக உண்டாகுமே.

(59) சிறிய குழந்தயர் குஞ்சுபோலாய்
தீங்காய் இலைதன்னை வாயில் வைத்து
குறிகேடாகவே உருஞ்சுவோர்க்கு
குன்றும் அகத்திமான் சென்றுபோமே.

(60) முகங்கள் கருத்திடும் இதழ் வெளுக்கும்
மூச்சுமிக முட்டும் நாய்போலேக்கம்
அகங்கள் கருத்துபோம் கல்படைக்கும்
அழகாம் உடலெல்லாம் அந்தம் கெடும்.

(61) சேதம் வருத்திடும் புகை குடிப்போர்
தீங்கர் இதழ் வெளுக்குமதனே
நாதனருள் பெற்றோர் கண்டார்களாய்
நாவில்வார் அஊதுபில்லா எனவே.

(62) ஆகாத் தீனுக்கு அடிமூடாகும்
ஆரையும் கெஞ்ச வருத்திவிக்கும்
போகாதலமெல்லாம் புகுதிவிக்கும்
பொல்லாங்கடங்கலுக்கும் அஸ்லிதுவே.

(63) முதலை [1]கருபாக்கும் உரத்தை மாத்தும்
மோக தாதுவை போக்கிவிக்கும்
பதலாய் இதற்கு மிளகு சுக்கை
வசமாக கூட்டு இதை மாற்றுமே.

(64) நாடுதனில் நல்லோர் இதை முனிவார்
நாவால் மிக பேசி [2]பதுவா செய்வார்
வீறல்ல இதை விட்டகல்வாய்
வின்னேளமைத்தாதி றஹ்மத்துண்டாம்.

(65) பாம்பு எலி ஒரு பாளிதனில்
படுத்துக் கிடந்தாக்கால் அதில் தீவிட்டால்
பாம்பு எலி அதில் பிறப்படும்போல்
பகரமுள ஈமான் பரந்திடுமே.

(66) கழுவன் இபுலீஸு இப்புகையால்
குச்சம்தனிலுள்ள ஈமான் தன்னை
பளுதாக்கிப் பிறத்திலாக்குவான்
பளீ ஹறத்தணுகிய புகை அருந்தாய்.

(67) கள்ளுதனிலும் கஞ்சாதனிலும்
கடினமுள மஸ்து புகைஇலை யென்று
உள்ள உலமாக்கள் செப்பலுற்றார்
உடப்பாம் முஸ்லிம்கள் இதை தவிழ்வீர்.

1) அழிக்கும் 2) சாபம்



(68) கொள்ளி பிசாசுபோல் வாயில் தீத்தும்
கொண்டுவரும் வண்டன் தன்னை கண்டால்
தள்ளி அகலுவார் ஸாலிஹானோர்
ஷெய்த்தான் தனை கண்டால் போலாகவே

(69) செப்பமுள்ள ஹாஜி பெருத்த ஆலிம்
செய்யிது அலி செப்பலுற்றார்
ஒப்பமுள்ள ஸுல்தான் முஸ்லிமென்னால்
உரைப்பேன் முதலிதை தவிர்த்தனவே.

(70) ஷெய்கு ஸதகத்துல்லா ஹாஜியார்
தேசம் தனக்கெல்லாம் [1]கத்தெழுதி
வாகாய் அனுப்பினார் இதனை நீங்கள்
விலகி அருந்தவும் வேண்டாமென்றே.

(71) பாட்டு கவி அறிந்தோர்களெல்லாம்
பழிப்பாய் பாடினார் புகையிலையை
நாட்டமாய் ஷெய்கு முஹம்மதென்போர்
நவின்றார் ஒரு ஏடு பழிப்பாகவே.

(72) கற்புள்ள மங்கை கற்பழிக்கும்
கைகண்ட புகைஇலை இலையென்று
அர்ப்பம் பிசகன்றி அறிஞர் சொன்னார்
ஆகா இலை தண்ணீர் குடியீர்களே.

(73) ஓந்தி இனம் பல்லி இனம் தனக்கு
ஊத்தை புகை கசாளம் குடித்தால்
மாந்தி மரித்திடும் உடல்பதிர
மறுவில் மரித்தோர்த்தால் வகுத்தும்

(1) கடிதம்

(74) ஆகா புகைஇலை கிடந்த தட்டின்
அகன்ட மறு தட்டின் பாக்கு தின்றோன்
சாகக்கிடந்த செய்திதனைத்தான்
தாலம்தனில் கேட்டு தவிர்ந்துகொள்வாய்.

(75) உட்டம்தனக்கென்று ஓர் இலையை
உன்னி அருந்தி உள்ளில் சென்றபின்
கெட்ட மரிப்பானேன் செய்திதன்னை
கிளர்த்த ஒருக்காலும் கேட்டிலையோ.

(76) கஞ்சா ஒரு சிறங்கை குடித்தோன்
ஹயாத்து அழியாது கள்ளும் இப்போல்
பொஞ்சா இலைச்சாறு கொஞ்சம் குடித்தோன்
பொல்லா பலாய் கொண்டு செத்துப்போவான்.

(77) ஓதின சில ஷெய்த்தான்கள் தான்
ஊன புகைஇலை குடிக்க கண்டு
மேதினி தீனோர் குடிக்கவேண்டாம்
வெறி இலைதன்னை மறப்பீர்களே.

(78) மோடை வணங்குவோர் தங்களாகும்
மோச அறிவாளி அவர்களாகும்
கேடாய் அழிவா ரென்உம்மத் தென்று
கிருபை முஹம்மது நபிவாழ்த்தினர்.

(79) மனிதர் தனில் பொல்லா வன்பாகிய
வடுவாம் அறிவாளரென்று நபி
இனிதாய் உரைக்கலுற்றார் நல்லோரே
இன்மை தனில் பார்த்து நடப்பீர்களே.



(80) சலிப்பு மிகச்சேரும் தீ ஓடையில்
[1]ஷற்றும் [2]ரியாவுக்காய் ஓதினோர்கள்
கலப்பாய் கிடந்து வேவார்களென
கனதி நபிசொன்னார் நல்லோர் பார்ப்பீர்.

(81) தன்மை புகைகுடித்தோர்கள் படும்
தன்மைதனைக்கண்டு சிலர் தவிழ்ந்தார்
வன்மையாய் சிலர் மனமில்கூடி
வடுவாக கண்டும் சிலர்விட்டார்கள்.

(82) ஈனபுகை புசித்தோள் தனக்கு
இழும்பான கட்டம் தனைகரைத்து
தானமாய்குடி என்றுசெப்ப
சயனம்தனில் சிலர் கண்டார்களே

(83) செல பேரவர்கள்வாய் தன்னில்நின்றும்
தீயும் புகையுமாய் பிறத்திப்பட
பிலமாகக்கண்டு புகைவிட்டார்கள்
புகழ்சேர் தீனோர்கள் விடுவீர்களே

(84) குடல்கள் உருகி வாயில்வரும்போல்
கொடிய நாற்றமாய் வாயால்வர
திடனாய்சிலர் கண்டறிந்துவிட்டார்
ஷெய்த்தான் மனிதர்கள் கொடுவருவார்.

(85) உடம்புதனைசெலர் உருஞ்சகண்டும்
உடம்புதனை பிச்சிதின்னக் கண்டும்
அடம்பு மிகச்சேரும் பேய்இலையை
அகன்றார்கள் சிலர் அதபாகவே.

(1) தீங்கு (2) முகஸ்துதி

(74) ஆகா புகைஇலை கிடந்த தட்டின்
அகன்ட மறு தட்டின் பாக்கு தின்றேன்
சாகக்கிடந்த செய்திதனைத்தான்
தாலம்தனில் கேட்டு தவிர்ந்துகொள்வாய்.

(75) உட்டம்தனக்கென்று ஓர் இலையை
உன்னி அருந்தி உள்ளில் சென்றபின்
கெட்ட மரிப்பானேன் செய்திதன்னை
கிளர்த்த ஒருக்காலும் கேட்டில்லையோ.

(76) கஞ்சா ஒரு சிறங்கை குடித்தோன்
ஹயாத்து அழியாது கள்ளும் இப்போல்
பொஞ்சா இலைச்சாறு கொஞ்சம் குடித்தோன்
பொல்லா பலாய் கொண்டு செத்துப்போவான்.

(77) ஓதின சில ஷெய்த்தான்கள் தான்
ஊன புகைஇலை குடிக்க கண்டு
மேதினி தீனோர் குடிக்கவேண்டாம்
வெறி இலைதன்னை மறப்பீர்களே.

(78) மோடை வணங்குவோர் தங்களாகும்
மோச அறிவாளி அவர்களாகும்
கேடாய் அழிவா ரென் உம்மத் தென்று
கிருபை முஹம்மது நபிவாழ்த்தினர்.

(79) மனிதர் தனில் பொல்லா வன்பாகிய
வடுவாம் அறிவாளரென்று நபி
இனிதாய் உரைக்கலுற்றார் நல்லோரே
இன்மை தனில் பார்த்து நடப்பீர்களே.



(80) சலிப்பு மிகச்சேரும் தீ ஓடையில்
[1]ஷற்றும் [2]ரியாவுக்காய் ஓதினோர்கள்
கலப்பாய் கிடந்து வேவார்களென
கனதி நபிசொன்னார் நல்லோர் பார்ப்பீர்.

(81) தன்மை புகைகுடித்தோர்கள் படும்
தன்மைதனைக்கண்டு சிலர் தவிழ்ந்தார்
வன்மையாய் சிலர் மனமில்கூடி
வடுவாக கண்டும் சிலர்விட்டார்கள்.

(82) ஈனபுகை புசித்தோள் தனக்கு
இழ்மபான கட்டம் தனைகரைத்து
தானமாய்குடி என்றுசெப்ப
சயனம்தனில் சிலர் கண்டார்களே

(83) செல பேரவர்கள்வாய் தன்னில்நின்றும்
தீயும் புகையுமாய் பிறத்திப்பட
பிலமாகக்கண்டு புகைவிட்டார்கள்
புகழ்சேர் தீனோர்கள் விடுவீர்களே

(84) குடல்கள்உருகி வாயில்வரும்போல்
கொடிய நாற்றமாய் வாயால்வர
திடனாய்சிலர் கண்டறிந்துவிட்டார்
ஷெய்த்தான் மனிதர்கள் கொடுவருவார்.

(85) உடம்புதனைசெலர் உருஞ்சகண்டும்
உடம்புதனை பிச்சிதிண்ணக் கண்டும்
அடம்பு மிகச்சேரும் பேய்இலையை
அகன்றார்கள் சிலர் அதபாகவே.

(1) தீங்கு (2) முகஸ்துதி

(86) குழியில்புகை நெருப்பாய்குமரி
குமுகுமுவென எரியக் கண்டு
பழிசேர் [1] அதாபேதானென்றபோது
பங்க புகைகுடி. இது நாலென்றான்.

(87) எந்தன் அதாபுபோ லெவர்களுக்கும்
ஈனமிதால்வந்து அணையாமலே
நந்தும்படி சொல்வீர் உலகிலென்றான்
சாலம்தனில் தீனோர் விடுவீர்களே.

(88) பவிசைகளித்து வாயில்புகையை
பங்கமாய் வைத்து தொழுகைவிட்டு
கிலுசை கெட்ட புல்லன்தன் கபுரில்
[2] ஹின்ஸீராய் விழக்கண்டதுவே

(89) ஆதிகுறு ஆனில் மணமாகிய
அன்பான வஸ்தை தினுங்கோளென்றான்
நீதி நபி சொன்னார் உங்கள் வாயை
நெறியாம் மணமாக்குங்கோளெனவே.

(90) மணமானபண்டம் தன்னை இறை
வாயாலருந்துங்கோ ளென்றுசொன்னான்
பிணமாம் இலைபுசிப்பது ஹறாமாம்
பெரியோன் குறானுக்கு மாறாகுமே

(91) வானேழும் கடந்தறுஷில் சேர்ந்து
வல்லான்உடன் வசனித்த நபி
தானமாய் மணமாக்கச் சொன்னார்
ததனுள்ள நாற்றமாக்குவாயோ

(1) வேதனை (2) பன்றி



(92) ஆதிபெரியோனும் அவன்தூதரும்
அருளினஉரை கேளாதபேர்
மேதினிலும் மறுமைதனிலும்
விதனமிகப்படுவார் சலிப்பார்

(93) ஈனன் இபிலீஸ் மூத்திரத்தால்
எழுந்தபுகையிலை தனைஉகந்தோர்
வானமனமத்தாதி முனிவிலாவார்
வருசை நபிமன்றாட்டம் வராதே.

(94) [1] ஆகிர் அகிலத்தில் தீனோரெல்லாம்
ஆகா இலை தீனைபுகை குடிப்பை
சாகுமுதவிட்டு தவ்பாசெய்து
சறபாய் மரியுங்கோ றஹ்மத்துண்டாம்

(95) ஆதிதனைக்கொண்டும் அவனுடைய
அழகான நாலுவேதம் கொண்டும்
நீதிநபிமார்கள் தன்னைக்கொண்டும்
நகழ்த்துவேன் ஆணைவிடுவீர்களே

(96) ஹலாலான ஈரவெங்காயத்தை
கருதிஅருந்தினோர் அவர்பள்ளியில்
நிலாவானநபி விலக்கலுற்றார்
நெறியோ இவன்பள்ளியில் வரவே.

(97) பள்ளிதனில் வரஆகாதவன்
பளீஹத்தனுகிய முழுக்காளிபோல்
தெள்ளிதாயானான் ஷெய்த்தானுக்கு
சினேகிஎனும் தோழன் தானுமானான்.

(1) கடைசி.

(98) தாவூதிமாம் சொன்னார் மிஸ்வாக்கிட்டு
ஸலாத்து இருதவன் தவமழியும்
தாவும் புகைநாற்றம் மிஸ்வாக்கினால்
தள்ளாது இவன் தவம் பாத்திலே.

(99) வாய்நாற்றம் கொண்டுமலக் ககல்வார்
மனதால் முனிந்திடுவார் மனிதர்
வாய்நாறி துஆ கபுலா காது
வாய்நாறி மன்னர் பாலடானே.

(100) நினையாப்புறத்திலே சதிமுட்டாக
நின்பால் சாவுவந்தடுக்குமுத
வினைசேர் புகைஇலை விட்டுநன்றாய்
விரும்பி தவுபாச்செய் றஹ்மத்தாமீன்.

(101) கலிமா, பாத்திஹா, குல்ஹு வல்லா
கனதி துஆ குறான் ஓதும்வாயால்
வலியபெரும் நாற்றபுகை இலையை
விடுவாய் அருந்தாதே தவ்பாசெய்வாய்.

(102) எழியபயல்ஸாமு தமிழ்பைத்தால்
இயம்பும் புகையிலை மஸ்அலாவை
தெளிவாகக்கேட்டு நடப்போரெல்லாம்
ஜென்னத்தெனும்பதி வாழி. வாழி

(103) இந்தபுகைஇலை மஸாலா தன்னை
எழுதிப்பரப்பாக்கு வோர்கள்வாழி
அந்தமாய் படிப்போர்கள் வாழி
அழகாய் கேள்ப்போர்கள்வாழி ஆமீன்.



(104) சூரியன்போலாய் உலகில் வந்த
ஸுலைமான் மகுதூம் மைந்தரில்
சூரன்போல் ஸாமுலெப்பைஎன
சொல்லப்படுகின்றேன் இதைமுகித்தேன்

(105) ஆதிறஹ்மத்து அதனைக்கொண்டும்
அண்ணல் நபிஸலாம் ஸலாத்துக்கொண்டும்
மேதினிதனில் ஸாமென்பவன்
விதன புகைமஸாலா முகித்தேன்

(106) தோசமுளஸாமு என்போனுக்கும்
சொகுசாய் வளர்த்த அன்னைபிதாக்கும்
மோசமணுகாத இஹ்வானுக்கும்
முன்னோன் றஹ்மத்துண்டாக ஆமீன்.